**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | **திரு. சின்னச்சாமி** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.06.2022**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் M.கல்லுப்பட்டியில், துள்ளுக்குட்டிநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். நான் திண்டுக்கல் மாவட்டம், கொசவபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்து ஆளுனராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 25.01.2020ம் தேதி சுமார் 06.00 மணியளவில் எனது மனைவி அங்கம்மாள் என்பவர் எங்கள் ஊரில் உள்ள பலசரக்கு கடைக்கு பலசரக்கு வாங்குவதற்காக சென்றார். அப்போது, எங்கள் ஊரில் சாக்கடை கட்டுவதற்காக மூன்றடி சுவர் எழுப்பி இருந்தார்கள். அந்த மூன்றடி சுவரில் ராமர் மகன் சதீஷ் என்பவர் அந்த சுவரின் மீது நின்று கொண்டு இருந்தார், பக்கத்து வீட்டு பெத்தனன் மகன் மாரியப்பனும் பேசிக்கொண்டு இருந்தார்கள். சுமார் 06.20 மணிக்கு பலசரக்கு வாங்கிவிட்டு, திரும்பி வரும்போது, 1 வது எதிரி சதீஷ் என்பவன் அந்த சுவர் மேல் உட்கார்ந்து, அந்த சுவரில் ஏறுவதற்கு கல் போடுவதற்கு வைத்திருந்த கல்லில் மீது ஏறி 1 வது எதிரி அந்த சுவரில் உட்கார்ந்திருந்தார். அப்போது பக்கத்தில் இருந்த மாரியப்பன், பெரியம்மா வர்ராங்க, இங்கிட்டு தள்ளி வாடா என்று 1 வது எதிரி சதீஷ் ஐ அழைத்த போது, அவ இங்க வரட்டும்னு

தான் நான் வம்புக்கு உட்கார்ந்து இருக்கேன் என்று சொன்னார். அப்போது எனது மனைவி அங்கம்மாள் வந்து, வழியை விட்டு உட்காருப்பா என்று 1 வது எதிரியிடம் கேட்டபோது, ஏன்டா தேவடியா நீ சுத்திப்போடி என்று எனது மனைவியை சத்தம்போட, என் மனைவி சத்தம் போட்டுக்கொண்டிருக்க அப்போது, 1 வது எதிரியின் அப்பா 3 வது எதிரி ராமர், அம்மா 2 வது எதிரி பொன்மாரி இருவரும் வந்து எனது மனைவி அங்காமாளுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் யூரின் செய்வதற்காகவும், எனது மனைவி கடைக்கு சென்று 20 நிமிடத்தில் வந்துவிடுவார் என்றும், இன்னும் வரவில்லை என்ற ஆதங்கத்தோடு, நான் போய் பார்த்தபோது, என் மனைவியினுடைய முடியை பிடித்து 2 வது எதிரி பொன்மாரி இழுத்துக்கொண்டு இருந்தார். கெட்ட வார்த்தை பேசிக்கொண்டு இருந்தார். நான் அருகில் சென்று சத்தம் போடவும், 2 வது எதிரி பொன்மாரியும்., 3 வது எதிரி ராமரும் அவருடைய மகன் 1 வது எதிரியிடம் கம்பை எடுத்துக்கொண்டுவந்து இவனை அடித்துக்கொள்ளுடா என்று சொன்னார். உடனே 1 வது எதிரி கம்பை எடுத்துக்கொண்டு வந்து என்னுடைய மனைவியினுடைய கழுத்தின் பின்பகுதியில் அடித்தார். அப்போது நானும் பக்கத்தில் இருந்த மாரியப்பனும் எனது மனைவியின் கையைப்பிடித்து தூக்கினோம். அப்போது 2 வது எதிரி பொன்மாரியும், 3 வது எதிரி ராமரும் இவனையும் அடித்து கொல்லுடா என்று சொன்னார்கள். நான் வயதான காரணத்தினாலும், அவர்களுடன் சண்டைபோடும் சக்தி இல்லாத காரணத்தினால் தடுமாறிக்கொண்டிருந்த எனது மனைவியை எனது வீட்டிற்கு நானும் மாரியப்பனும் எனது மனைவி அங்கம்மாளின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றோம். அப்போது, மாரியப்பனிடம் நான், ஏண்டா நீ பக்கத்தில் தான இருந்த, விலக்கி விட்டிருக்கலாம்ல என்று கேட்டபோது, நான் வம்புக்கு அடிக்கனும்தான் உட்கார்ந்திருந்தேன் உனக்கு தெரியும்ல என்று சொல்லவும், நான் மாரியப்பனை நீ உன் வீடிற்கு போ, நான் எனது மனைவியைப் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அதன் பிறகு நான் எனது மனைவியை கை தாங்கலாக வீட்டில் கொண்டு

போய் இருக்கும் போது, எனது மனைவி சிரமத்தோடு சுவரைப் பிடித்து நின்றார். (சாட்சி கண் கலங்கிக்கொண்ட பேச இயலாமல் சாட்சியம் அளிக்கிறார்). உனக்கு என்னம்மா செய்யுது என்று நான் எனது மனைவியை விசாரித்தேன். அப்போது புடதியில் அடிச்சதால கழுத்து வலிக்குது என்று என்னிடம் எனது மனைவி சொன்னார். மயக்கமாக இருக்கிறது என்று சொல்லி சாய்ந்து கீழே உட்கார்ந்துவிட்டார். அப்போது எனது பேத்தி தேவஸ்ரீ, 7ம் வகுப்பு படித்து வந்தவர், எனது மனைவிக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார். அப்போது தண்ணீரை குடித்த பின்பு எனது மனைவி அங்கம்மாள் 2வது எதிரி பொன்மாரி முடியைப் பிடித்து இழுப்பதற்கு முன்பே அவளது புருஷன் என்னை வயிற்றில் எத்தினான் என்று சொன்னார். அதற்கு பிறகு நான் எனது மனைவியை ஆஸ்பத்திரிக்கு போவமா என்று கேட்டபோது, என்னை ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போங்கள் என்று சொன்னார். எனது மகன் மதன்மோகன் என்னுடைய பழைய காரவீட்டில் குடியிருந்தார். அவருக்கு போன் செய்து வரச்சொல்லி இரண்டு பேரும் எனது மனைவி அங்கம்மாளை ஆட்டோவில் அழைத்துக் கொண்டு M.கல்லுப்பட்டியில் உள்ள பிரைவேட் ஆஸ்பத்திரியில் மருத்துவத்திற்கு கொண்டுபோய் செல்லும்போது, மருத்துவர் எனது மனைவியைப் பார்த்துவிட்டு, மிகவும் மோசமாக இருக்கிறார்கள், நீங்கள் உசிலம்பட்டிக்கு கொண்டுபோங்க என்று சொன்னார்கள். மருத்துவரிடம் காட்டிவிட்டு, கீழே இறங்கும்போது, (சாட்சி பேச இயலாமல் கண்ணீருடன் சாட்சியம் சொல்கிறார்) எனது கையைப் பிடித்து, நீங்க கவலப்படாதீங்க, நான் இருக்கேன் என்று எனது மனைவி சொன்னார். அதன் பிறகு எனது மனைவியை உசிலம்பட்டியில் உள்ள பாலா மருத்துவமனைக்கு கொண்டு சென்று வைத்தியத்திற்கு சேர்த்தேன். அப்போது அங்கிருந்த மருத்துவர்களும் எனது மனைவியை பரிசோதித்து விட்டு உங்கள் மனைவியின் நிலை மோசமாக இருக்கிறது என்று சொன்னார்கள். 26.01.2020ம் தேதி குடியரசு தினம் அன்று உசிம்பட்டி பாலா மருத்துவமனையிலிருந்து மதுரை VN மருத்துவமனைக்கு எனது மனைவியை சிகிச்சைக்கு அழைத்து வந்தேன்.

அதற்கு பிறகு அங்கு ஒரு நாள் வைத்தியம் செய்த பிறகு, சரியில்லை என்று மருத்துவர் சொன்ன பிறகு, 28.01.2020 ம் தேதி 06.00 மணிக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் எனது மனைவி அங்கம்மாளை சேர்த்து வைத்தியம் செய்தேன். அங்கு வைத்தியம் செய்துகொண்டிருந்த போது, சிரமத்தில் தான் எனது மனைவி அங்கம்மாள் இருந்தார். 28.01.2020 ம் தேதி எழுமலை காவல்நிலையத்தில் இருந்து விசாரிப்பதற்காக வந்தார்கள். M கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் இருந்தும் விசாரிக்க வந்தார்கள். அவர்களிடம் நான் என்னுடைய விவரத்தை சொன்னேன். அவர்கள் பதிவு செய்து கொண்டார்கள். 28.01.2020 ம் தேதி பகல் 11.10 மணிக்கு என் மனைவி இறந்துவிட்டார் என்று மருத்துவர் தெரிவித்தார். அதன் பிறகு எனது மனைவியை பிணவைப்பறையில் வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது நான் அளித்த புகார் தான். **புகார் அதசாஆ. 1 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் விரகு கட்டையால் தான் எனது மனைவியை 1 வது எதிரி எனது மனைவியை அடித்தார். அதை நான் என் கண்ணால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் **அசாபொ.1 ஆகும்.** எனது மனைவிக்கு புடதியில் காயம் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பில் கு.வி.</u>

நான் கொடுத்த புகாரில் பெத்தனன் மகன் மாரியப்பன், அங்கிருந்து பேசிக்கொண்டிருந்த விபரத்தை சொல்லவில்லை. ஆனால் அவர் அங்கிருந்தார் என்று சொல்லியுள்ளேன். 06.20 மணிக்கு சதீஷ் சுவரில் உட்கார்ந்திருந்தார், அந்த சுவரில் உட்காருவதற்கு கல்போட்டு இருந்தார்கள் என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். மாரியப்பன் பெரியம்மா வர்ராங்க, நீ எந்திரிச்சுக்க என்று சொன்னதாகவும், அதற்கு சதீஷ் வரட்டும், நான் வம்புக்கு தான் உட்கார்ந்து இருக்கேன் என்று என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என் மனைவி கடைக்கு சென்றுவிட்டு 20 நிமிடத்தில்

வந்துவிடுவார், இராத்திரி நேரம் ஆகிவிட்டதால் நான் பதட்டத்தில் இருந்தேன் என்று என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் போய் பார்த்தபோது, என் மனைவியை பொன்மாரி முடியைப்பிடித்து இழுத்துக்கொண்டிருந்த விபரத்தை என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. நானும் மாரியப்பனும் எனது மனைவியின் கையைப் பிடித்து தூக்கினோம் என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். மாரியப்பனிடம், ஏன்டா நீ பக்கத்திலேயே இருந்த, விலக்கிவிட்டிருக்கலாம்ல என்று கேட்டேன், நான் வம்புக்குத்தான் உட்கார்ந்துஇருந்தேன், உனக்கு தெரியும்ல என்று மாரியப்பன் என்னிடம் சொன்னதாக என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. மாரியப்பனை நீ உன் வீட்டிற்கு போ, நான் எனது மனைவியை பார்த்துக்கொள்கிறேன் என்று மாரியப்பனை அனுப்பிய விபரத்தை என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் வீட்டிற்கு கூட்டிப்போனேன், எனது பேத்தி தேவஸ்ரீ வீட்டிற்கு வந்து, எனது மனைவிக்கு தண்ணீர் கொடுத்தார் என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லியுள்ளேன் ஆனால் அவர்கள் எழுதவில்லை. தண்ணீர் குடித்த பிறகு எனது மனைவி அங்கம்மாள் 2 வது எதிரி முடியைப்பிடித்து அடிப்பதற்கு முன்பாக அவரது கணவர் வயிற்றில் எற்றினார் என்று என்னிடம் சொன்ன விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். மெயின் பஜாரில் ரோட்டில் கடைகள் உள்ளது. எந்த கடைக்கு என் மனைவி போனார் என்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த கடை உரிமையாளர் பெயர் முருகன் ஆகும். முருகன் கடைக்கு போவதற்கு முன்பு இன்னொரு பலசரக்கு கடை உள்ளது. பாப்பநாயக்கன்பட்டி டு M கல்லுப்பட்டி மெயின்ரோடு தார் ரோடு என்றாலும் அது கிழமேல் ரோடு என்றாலும் சரிதான். கடையானது, எனது வீட்டில் இருந்து வடக்கே வந்து, கிழக்கு திரும்பி நான் சொன்ன முருகன் கடைக்கு செல்லவேண்டும். முருகன் கடைக்கும் சம்பவ இடத்திற்கும் இடையே மயானத்திற்கு செல்லும் ரோடு உள்ளது. அது தார் ரோடு என்றால் சரியல்ல.

மண் ரோடு ஆகும். தற்சமயம் தான் தார் ரோடு போட்டுள்ளார்கள். அது அகலமான வீதி. அந்த வீதியில் இரவு மின்சார லைட்டுகள் எரியும். அந்த தெரு வழியே தெற்கு பக்கம் சென்று, மேற்கே திரும்பினால் கடைசியில் எனது வீடு உள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு தெற்கே ஒரு சந்து உள்ளது. அந்த சந்து மேடும் பள்ளமுமாக இருக்கக்கூடிய ஒரு சந்து ஆகும். கடையிலிருந்து மயானத்திற்கு செல்லும் பெரிய ரோட்டின் வழியாக சென்றால் எனது வீடு பக்கமாக இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் இருந்த சந்து கல்யாண மண்டபத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. அந்த கல்யாண மண்டபத்திற்கு அருகே போஸ்ட் ஆபிஸ் உள்ளது. அந்த தெருவில் தெரு விளக்குகள் எதுவும் இல்லை. எனது சின்ன மகன் மதன்மோகன் வீடு பாப்பநாயக்கன்பட்டி டு M கல்லுப்பட்டி ரோட்டின் மேற்கு பக்கம் அம்மன் கோவில் கிழக்கு பகுதியில் உள்ளது. எனது வீட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் தூரத்தில் எனது மகன் வீடு உள்ளது என்றால் சரியல்ல. சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். பாப்பநாயக்கன்பட்டி டு M கல்லுப்பட்டி ரோட்டில் இருந்து எனது வீட்டிற்கு வருவதற்கு இடையே நிறைய வீடுகள் உள்ளது. அதே போல் எனது மகன் வீட்டிற்கு செல்வதற்கு இரண்டு மூன்று வீதிகள் உள்ளது என்றால் சரியல்ல. இடையே நிறைய வீடுகள் உள்ளது . எனதுக்கு மொத்தம் 3 மகன்களும், ஒரு மகளும் உள்ளார்கள். அனைவருக்கும் திருமணம் ஆகி தனித்தனியே குடியிருந்து வருகிறார்கள். எனது மகள் மகேஷ்வரி சின்னக்கட்டளை என்ற ஊரில் குடியிருக்கிறார். எனது மகன்கள் மதன்மோகன், சரவணன், விநாயசெல்வன் ஆகும். மதன்மோகனும், விநாயசெல்வனும், மதுரை திருநகரில் கோப்டெக்ஸ் வேலை பார்க்கிறார்கள். எனது மகன் சரவணன் தேனியில் சம்பவ சமயத்தில் வேலை பார்த்துவந்தார். பாலா ஆஸ்பத்திரி, VN மருத்துவமனைகளுக்கு எனது மனைவியை அழைத்துச் சென்றபோது நானும் உடன் சென்றேன். உள்ளூரில் இருந்த பிரைவேட் ஆஸ்பத்திரிக்கும் நான் உடன் சென்றேன். அங்கே இருந்த மருத்துவர்கள் எனது மனைவியிடம் வெளிக் காயங்கள் பார்த்தார்கள். அந்த காயங்கள் எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்ற விபரங்களை

என்னிடம் விசாரித்தார்களா என்றால் கேஸ் விஷயத்தை சொல்லவில்லை. காயம் எப்படி வந்ததது என்று கேட்டார்கள். அடித்தால் காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். யார் அடித்தது என்று மருத்துவரிடம் சொல்லவில்லை. மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு நான் எனது மனைவியை அழைத்து வந்தபோது, எனது மகன்கள் மூன்று பேரும் வந்தார்கள். மகளும் வந்தார். அப்போது, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள அரசு மருத்துவர் எனது மனைவிக்கு ஏற்பட்ட காயம் யாரால் எப்படி ஏற்பட்டது என்று என்னிடம் கேட்டார்கள். மதுரை அரசு மருத்துவர் கேட்டபோது, கைகளால் என் வீட்டு முன்பாக மூன்று பேர் கைகளால் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை. விறகு கட்டைக்கும் கம்புக்கும் எனக்கு வித்யாசம் தெரியும். புகாரில் கம்புனால் தாக்கியதாக சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையின் போது விறகு கட்டையால் தாக்கியதாக சொன்னேனா என்றால் கம்பு என்று தான் சொன்னேன். அசாபொ.1 விறகு கட்டை என்றால் அது கம்பு ஆகும். என்னிடம் கம்பையோ, விறகு கட்டை இரண்டையும் காட்டி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னிடம் அசாபொ.1 ஐ காட்டி விசாரித்தார்கள். எனது வீட்டிற்கு உள்ளே கழிப்பறை உள்ளது. நான் பெரிய வீதி உள்ள ரோட்டில் தகறாறு நடக்கிறது என்று தகவல் கேட்டு சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்தேன். புகாரில் சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்று பார்த்ததாக சொல்லவில்லை. M கல்லுப்பட்டி காவல்நிலையம் எனது வீட்டில் இருந்து சுமார் 1 கிமீ தூரத்தில் உள்ளது. சம்பவ தினத்தில் M கல்லுப்பட்டி காவல்நிலையத்திற்கு நான் சென்றேன். அங்கு சார்பு ஆய்வாளர் இருந்தார். அவரிடம் நடந்த சம்பவத்தை எல்லாம் நான் சொன்னேன். எனது மகன் நான் கொடுத்த புகாரில் சாட்சி கையொப்பம் போடவில்லை. எனது மகன்களை சாட்சி கையெழுத்து போடச்சொல்லி போலிசார் சொல்லவில்லை. நானாகவே, எனது மகன்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்பதால் எனது மகன்களை சாட்சி கையெழுத்து போடவேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது சுமார் 50,60 பேர் இருந்தார்களா என்றால் சுமார் 4,5 பேர்

இருந்தார்கள். இந்த வழக்கு விஷயமாக என்னை காவல்துறையினர் மூன்று நாட்கள் கழித்துத்தான் விசாரணை செய்தார்கள். மதுரை அரசு மருத்துவமனையில் நான் 2 நாட்கள் இருந்தேன். அரசு மருத்துவனைக்கு உள்ளேயே காவல்நிலையம் உள்ள விபரம் பற்றி எனக்குத் தெரியும். சம்பவம் குறித்து அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள காவல்நிலையத்தில் நான் சொன்னேன். அவர்கள் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனது மகனிடம் வாக்குமூலம் எழுதிக்கொண்டு கையொப்பம் வாங்கினார்கள். நான் வாக்குமூலம் கொடுக்காதற்கு காரணம் என் மனது கஷ்டமாக இருந்ததால் நான் அரசு ராஜாஜி மருத்துவமனை காவலரிடம் புகார் கொடுக்கவில்லை. 26.01.2020 ம் தேதி நடந்த சம்பவம் பற்றி M கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் நான் சம்பவம் பற்றி சொன்ன பிறகு, 28.01.2020 ம் தேதிவரை, எனது மனைவிக்கு ஏற்பட்ட காயம் குறித்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. சாக்கடை இரண்டு அடி அகலம் உள்ள சாக்கடை என்றால் சரிதான். சம்பவ காலத்தில் மெயின் ரோட்டில் இருந்து பாப்பநாயக்கன்பட்டி டு M கல்லுப்பட்டி மெயின் ரோட்டில் இருந்து, மயானரோட்டின் வழியே எங்கள் வீட்டிற்கு வரும் வழியில் சாக்கடை எதுவும் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி சொல்லித்தான் அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். எனது மனைவியின் கழுத்திலோ, தலையிலோ, இரத்த காயம் இருந்ததா என்றால் இல்லை. வீக்க காயம் தான் இருந்தது. எனது வீட்டிற்கு இரண்டு படிகள் உள்ளது. எனது மனைவி வீட்டின் படியில் ஏறும் போது ஏற முடியாமல் தடுமாறினார். M கல்லுப்பட்டி மருத்துவமனையில் வைத்து எனது மனைவி எனது கையைப்பிடித்து நன்றாகப் பேசிக்கொண்டு இருந்தார். நான் வீட்டில் இருந்து எனது மனைவியை அழைத்துக் கொண்டு காவல்நிலையம் சென்ற பிறகு தான் M கல்லுப்பட்டி மருத்துவமனைக்கு சென்றேன். சார்பு ஆய்வாளர் எனது மனைவியை விசாரிக்கவில்லை. எனது மனைவியிடம் விவரத்தை கேளுங்கள் என்று சார்பு ஆய்வாளரிடம் சொன்னேன். ஆனால் அவர் விசாரிக்கவில்லை.

மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லுமாறு சொன்னார். எனது மனைவிக்கு அடி பட்டதில் இருந்து, எனது மனைவி தடுமாறி கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. எனது மனைவி தடுமாறினார் ஆனால் கீழே விழவில்லை. நான் கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் இரவு 07.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 06.30 மணிக்கு நடந்ததாகத்தான் சொல்லியுள்ளேன். 07.00 மணிக்கு நடந்திருந்தால் இருட்டு என்பதால் யாரும் பார்த்திருக்க முடியாது என்பதால் 06.20 மணி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் மாலை 06.00 மணிக்கு எல்லாம் இருட்டாகி விட்டது என்றால் சரியல்ல. சாட்சி மாரியப்பனுக்கு நான் பெரியப்பா முறை ஆவேன். சாட்சி செல்வரதி எனது பேத்தி ஆவார் என்றால் எனக்கு சொந்தம் கிடையாது. சாட்சி செல்வரதி, பொன்னுச்சாமி, பழனிச்சாமி, மாரியப்பன், பெத்தனன், சின்னச்சாமி, ராஜேந்திரன் ஆகியோர் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரியல்ல. என் ஊரில் இருப்பவர்கள் எல்லாருமே எனக்கு உறவினர்கள்தான். எதிரிகளும் உறவினர்கள் தான். 3 வது எதிரி ராமர் வீடு எனக்குத் தெரியும். 3 வது எதிரி வீட்டிற்கு கிழக்கு பக்கம் காலி இடம் உள்ளது. அதை அவருக்கு ஒத்திக்கு கொடுத்திருந்தேன். அதில் 3 வது எதிரி ஆடு, மாடுகள் வளர்த்து வந்தார். அந்த காலி இடத்தை 3 வருடம் 3 வது எதிரிக்கு ஒத்திவைத்திருந்தேன். அந்த 3 வருடத்திற்கு முன்பாகவே நான் 3 வது எதிரியை காலி செய்யச் சொன்னேன் என்றால் சரியல்ல. 5 வருடம் கழித்து தான் காலி செய்ய சொன்னேன். அந்த இடத்தினை காலி செய்வது சம்பந்தமாக எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே எங்கள் இரண்டு குடும்பமும் பேசிக்கொள்ளமாட்டோம். இரண்டு குடும்பத்திற்கும் சம்பவத்திற்கு முன்பே விரோதம் உள்ளதால், சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது உள்ள முன்விரோதம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது வீட்டின் முன்பு யாரோ அடையாளம் தெரியதவர்கள் கைகளால் தாக்கியதால் எனது மனைவிக்கு காயம் ஏதும் ஏற்பட்டதாக அரசு மருத்துவரிடம் முதன் முதலில் சொல்லிவிட்டு, தற்சமயம் எதிரிகளை சேர்ப்பதற்காக 3 நாட்கள் கழித்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

2,3 எதிரிகள் யாரும் 1 வது எதிரியிடம் அடிங்கடா என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு அவர்கள் சொல்லி 1 வது எதிரி அடித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரி எனது மனைவியின் முடியைப் பிடித்து இழுத்தாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 வது எதிரி ராமர் எனது மனைவியின் வயிற்றில் எற்றியதாக நான் புகாரில் சொல்லவில்லை. ஆனால் நான் பார்த்தேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை